## கணக்காய்வு அவதானிப்புக்கள் - ஒதுக்கீட்டுக் கணக்கு 2011

## தலைப்பு 115 - பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சு

### 1. நிதி ஏற்பாடுகளின் குறைந்த பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான அமைச்சின் தேறிய நிதி ஏற்பாடுகளுடன்மேற்கொள்ளப்பட்ட செலவுகளை ஒப்பீடு செய்த போது ஒட்டுமொத்த சேமிப்புக்கள் மொத்த தேறிய நிதி ஏற்பாட்டின் 9% ஆக இருந்த போதிலும் சில செலவு விடயங்களின் கீழ் குறிப்பிடத்தக்க அளவான ஏற்பாடுகளின் சேமிப்புக்கள் காணப்பட்டன. 03 செலவு விடயங்களுக்கான ரூபா 225,000 கூட்டுமொத்தமான ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் 07 செலவு விடயங்கள் தொடர்பாக 25 சதவீதத்திலிருந்து 60 சதவீதம் வரையான சேமிப்புக்கள் ரூபா 2,424,099 கூட்டுமொத்தமாக இருந்தது.

### 2. வகைப்படுத்தல் தவறு

115-1-1-1404 ஆம் இலக்க செலவு விடயத்திற்கு வரவுவைக்கப்பட வேண்டிய ரூபா 437,500 தொகையானது பிழையாக 115-1-2-1404 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் கணக்குவைக்கப்பட்டிருந்தது.

### 3. கணக்குளைச் சமர்ப்பித்தலின் குறைபாடுகள்

(i) 2011 நவம்பர் 09 ஆந் திகதிய TOD/D/CM/2011 ஆம் இலக்க திறைசேரி செயற்பாடுகள் சுற்றுநிருபத்தின் 2:1 ஆம் பந்தியின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் காசேட்டினை மூடும் போது உரிய பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் தனது பெயரினையும் பதவியினையும் குறிப்பிட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்திருக்கவில்லை.

(ii) ஒதுக்கீட்டுக் கணக்கின் குறிப்பு (ii) இலுள்ள பொது வைப்புக் கணக்கில் ஆண்டின் போது வரவுவைத்தல்களான ரூபா 2,737,409 தொகையும் செலவு வைத்தல்களான ரூபா 2,276,274 தொகையும் ஒன்றுக்கொன்று மாற்றி வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

## 4. சொத்துக்களின் பயன்பாடு

1997 சனவரி 27 ஆந் திகதிய 116 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றுநிருபத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்பார்வை அமைச்சினால் தமது கடமைகளை மேற்கொள்வதற்காக கூட்டுத்தாபனம் மற்றும் சபைகளின் வளங்களை பயன்படுத்தக் கூடாது என்று அமைச்சின் செயலாளருக்கு அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போது இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் 18 ஊழியர்களை அமைச்சின் கடமைகளுக்காக ஈடுபடுத்தியதற்காக அவர்களின் சம்பளங்களும் படிகளுமாக கூட்டுத்தாபனத்தினால் ரூபா 16,976,249 தொகை செலுத்தப்பட்டிருந்தது மேலும் கூட்டுத்தாபனத்தின் ஆறு வாகனங்கள் அமைச்சின் சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.